956

956/3-57

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 SEP 1957
MADRAS

முல்லைக்கொடி

சான்றாண்மை இதழ் - குருகுலத் தாள்

[வெள்ளிக் கிழமையில்
கிழமைப் பதிப்பு]

ஆசிரியர்: இளவழகனார்

கிளை 9	ஏவிளம்பி, சித்திரை 28உ வைகாசி 4உ 10, 17–5–57	தளிர் 30–1

9ஆம் ஆண்டுக் கையொப்பம்
(14-10-56 முதல்)
உள்நாடு ரூ. 4 0 0
வெளி நாடு ரூ. 6 0 0

ஆயுள் -
கையொப்பம் ரூ. 100 0 0
மூகவரி:

குருகுலம்,
மதுராந்தகம் (அஞ்.);
செங்கற்பட்டு மாவட்டம்:
தமிழ் நாடு.

திருக்குறள் சாதி

1. சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி மறைக்குறள் நேர்மையாய் – ஓதித்
தெரிந்தோர் உயர்ந்தார், தெரியாதோர் தாழ்ந்தார்:
பரிந்துலகு சொன்ன படி.

2. சிறக்கும் படிகேள், செழுந்தமிழ் நன்னாடே
பரக்கும் புகழமைந்த பண்பின்–திருக்குறளை
ஓதியுணர்ந்தும் ஒழுகியும் வாழ்ந்தோரே
நாதர் உலகுக்கிந் நாள்.

3. மாந்தரிற் பல்லோர் மகிழ்ந்திந்நாட் கூறுவது,
தாந்தாந் திருக்குறளைச் சார்ந்ததனால் – வேந்தறிய
செந்தண்மை யந்தணராய்த் தேர்ந்துயந்தோம் ஏனையோர்
வந்திக்க வாய்வாழ்த்த வே.

4. வணங்கிய வாயும் மனமும் செயலும்
இணங்கிய சான்றோர் இனமும் – குணங்கொள்ளும்
வாழ்க்கையும் உண்டாக்கும். மாநிலமே சென்னி
தாழ்க்கையும் இக்குறளே தந்து.

5. 'தண்டமிழின் மேலாந் தர' மெனப் பட்டநூல்
எண்டிசையும் யாரும் இயம்புநூல் – பண்டுமுதல்
ஏந்துநூல் இக்குறளை ஏத்திப் பயின்றோரே
மாந்தருள் மேலாந் தரம்.

'என்கடன் பணி செய்து கிடப்பதே'

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா''.
—புறநானூறு.

முல்லைக் கொடி

கிளை 9	துன்முகி, சித்திரை 10-5-57	தளிர் 30

நல்லது நடக்கட்டும்

சற்றேறத் தாழ இரு நூறாண்டு கட்கு முன்னர் மேனாட்டினின்று நம் தமிழகத்தில் வாணிப நிமித்தம் கால் வைத்த கிழக்கிந்தியக் கம்பெனியார் கீழ்க்கடற்கரை யோரமாக இருந்த சிற்றூர் ஒன்று தம் நோக்கத்திற்குப் பொருத்தமாக இருப்பதை உணர்ந்தனர்.

ஆந்திரக் குறுநில மன்னன் சென்னப்ப நாயக்கருக்குச் சொந்தமாக இருந்த அச்சிற்றூரை ஆங்கிலேயர் அந்நாயக்க மன்னனிடமிருந்து வேண்டிப் பெற்றனர்.

தமிழகத்தின் தலை சிறந்த சைவ வைணவத் திருப்பதிகளாக நாயன்மார் ஆழ்வாரதிகள் பாடல்கள் பெற்றுச் சிறந்தொளிர்ந்த திருமயிலை, திருவல்லிக்கேணி, திருவொற்றியூர் இவற்றின் இடையில் கடற்கரையில் இருந்த அச்சிற்றூருக்குத் தம் நன்றியறிதலைப் புலப்படுத்தச் சென்னப்ப நாயக்கன் பெயரை நினைவு கூறும்வகையில் சென்னை என்று ஆங்கிலேயர் பெயரிட்டனர்.

சிறிது காலத்துக்குள் சென்னையைச் சூழ இருந்த கர்நாடக ஆந்திர நிலப்பரப்புக்கள் ஆங்கிலேயர்தம் அரசியற் சூழ்ச்சிகட் குள்ளாயின. பெரு நிலப்பரப்புக்கள் சிறிது சிறிதாக ஆங்கிலேயர் ஆட்சிக் குள்ளாயின.

சென்னையைச் சூழ இருந்த நிலங்கள் சென்னை மாநிலம் என்ற பெயரால் அழைக்கப்பட்டன.

சென்னை மாநிலம் உருவான வரலாறு இதுதான். தமிழக வரலாற்றின் முதற் படியை உணர்ந்தவர் கூட இவ்வுண்மையை உணர்ந்தே இருப்பர்.

சென்னை மாநிலம் என்ற பெயர், உண்மையில் ஆங்கிலேயர்தமிழகத்தைஅடிமைப் படுத்தி ஆட்சிக்குக் கொணரச் செய்த செயல்கள் பலவற்றை மக்கள் நினைவுக்கு உதவு தற்காகத்தான் வழங்கி வந்துள்ளது

இன்று பழைய நிலை இல்லை. ஆங்கில அடிமைத்தளை தகர்ந்து விட்டது பாரதியார் கண்ட பழம் பெருங்கனவை அண்ணல் காந்தியார் நனவிற் கண்டு களித்தார். வெள்ளையர் வெளியேறினர் நாமும் உரிமையாட்சியில் உளமகளித்து வாழ்கின்றோம்

இந்தியத் துணைக் கண்டத்தில் முன்பிருந்த மாநில அமைப்புக்கள் இன்று இல்லை. மிக்க மாறுதல்கள் இன்று காணப்பெறுகின்றன. மாநிலங்கள் ஒன்று பல ஆயின. பல ஒன்றாயின. பல மாநிலங்கள் புதிய பெயர்களைப் பெற்று ஆட்சி நடாத்துகின்றன

ஆங்கிலேயர் அன்று இட்ட பேரோடு விளக்கிவந்த சென்னையும், ஆந்திரம் கேரளம் கன்னடம் என்னும் தனித் தனிமாநிலங்கள் பிரிந்துபோன பின் தமிழ் மொழி வழங்கும் தனி நிலமாக இன்று காணப் படுகின்றது.

கேரளமும், கன்னடமும் ஆந்திரமும், மொழிவழியே தனித்தனி மாகாணங்களாகித் தம் மொழியின் அடிப்படையில் பெயர் சூட்டப் பட்டு விளங்கும் போது. தமிழ் பேசும் மாநிலம் மட்டும் பழைய சென்னை என்ற பெயரிலேயே வழங்கி வருவது உணர்ச்சி தருவதாயில்லை.

சென்னைக்குத் தமிழ் நாடு என்ற பெயர் கன்னடமும் கேரளமும் பிரிந்த அன்றே வழங்கியிருக்க வேண்டும். இதைக் குறித்து ஆட்சிமன்றம் வரையிற் சென்று சிலர் போராடுவதும், சட்டசபை உறுப்பினர் உட்பட அறிஞர் பலர் இப்பெயர் மாற்றங் குறித்து வற்புறுத்திப் பேசுவதும் உண்ணா நோன்பிருப்பதும் நாட்டு மக்கள் வியப்பினைத் தூண்டுகின்றது.

எளியதானதும் பொருத்தமானதுமான கோரிக்கையை சென்னை ஆட்சியினரும் உளங் கொண்டுள்ளனர்.

கூடியவிரைவில் நிறை வேறுவது, மக்கள் அன்பினைத் திரட்டுதற்கு உதவும்

உளமுவந்து முன்னரே செய்திருக்க வேண்டிய இந்த நல்ல ஏற்பாட்டை மக்கள் வேண்டுகோள் எழுந்த பின்னரேனும் உடன் செய்து விடுவது நாட்டு ஒன்றுமைக்கு ஏதுவாகும்.

இனியும் தாமதம் செய்யாமல் இம்மாநிலத்துக்குத் **தமிழ் நாடு** என்ற பெயரை இட்டழைக்க ஆட்சி முன்வர வேண்டு மென்று கோருகின்றேன்.

சி. து. க.

கலைப் பகுதி — உள வலிமைக்கு (முன் தொடர்ச்சி)

விமர்சனக் கலை

"இளம் பூரணன்"

4

மேனாட்டறிஞர்கள் இயல்பு நம்மவர் நோக்கத்திற்கும் போக்கிற்கும் முற்றும் வேறானது. மேனாட்டவர் நூல் ஆராய்ச்சிகள் விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் நிகழ்வன அல்ல, தாம் ஒரு நூலை விமர்சனம் செய்வது எத்தகைய அரிய பெரிய செயல் என்பதையும் தம் விமர்சனத்தால் மொழிக்கும் நாட்டுக்கும் விளையும் சிறந்த பலன்கள் இத்தணையது என்பதையும் அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். தம் விமர்சனத்தால் தமக்கு எதிர்காலத்தில் உண்டாகும் இன்னல்கள் மக்களின் விருப்பு வெறுப்புக்களும் அவர்களுக்கு நன்கு தெரிந்தனவே எனினும் அவற்றால் தம் நடு நிலைமையினின்று இறையும் பிறழ்ந்து நடக்க அவர்கள் நெஞ்சம் ஒருப்படுவதில்லை

நூலாசிரியன் மிகப் பெரிய நிலையில் திகழ்பவன் புகழேணியின் உச்சியில் திகழ்பவன் என்னும், அவகைளை எண்ணி அவன் இயற்றிய நூல்களிற்காணும். குற்றங்களை எடுத்தியம்பாது விடுவது மேனாட்டாரியல்பன்று. 16-ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த உலக மகாகவி சேக்குவீயரின் நூல்களை விமர்சனம் செய்யப் புகுந்த அறிஞர் பலர் அவர் நூல்களிற்காணும் சிறப்பியல்களை மட்டும் கூறிச் செல்லாது குற்றங்களையும் துணிவாக எடுத்தியம்பி விளக்கியிருப்பது அந் நாட்டவர் நடு நிலைமையைக் குறிப்பதாகும்.

பிற்கால மேனாட்டு விமர்சகர்களில் தலை சிறந்த மெக்காலேயின் விமர்சன நூல்கள் மக்கள் அறிவைத் தூண்டிச் செழிக்கவைக்கும் பேரிலக்கியங்களாகத் திகழ்வது கண்கூடு. வெறுப்பு வெறுப்புக்களாற் காய்தல் உவத்தல் என்பது மெக்காலேயின் விமர்சனங்களிற் பெரும்பாலும் காணவியலாது. இந்தியாவில் ஆங்கில ஆட்சிக்குவழிகோலிய 'ராபர்ட் கிளைவ்' வரலாற்றை எழுதப் புகுந்த மெக்காலே அவர்தம் அரிய பெரிய செயல்களைப்பாராட்டுவதோடு நில்லாமல் கிளைவ் ஒழிச்சந்து சாவகார் தொடர்பாகச் செய்த பொய்க் கையெழுத்து மோசடியை நன்கு விளக்கி அச் செயல் ஆங்கில மரபுக்கே பேரிழுக்கினைத்தருவது என்று கூறியிருப்பது அந் நாட்டவர் நடு நிலையுணர்வினைக் காட்டுகின்றது.

டாக்டர் ஜி. யு. போப் என்னும் மேனாட்டறிஞர் தமிழ் மொழித் திருவாசகத்தை மொழிபெயர்த்தது எதன் பொருட்டு? பக்திவலையிற்பட்டுவோனை ஆண்டவனிடத்தில் நம்மை நெருங்கும் படிச்செய்ய வல்ல திருவாசகத்தின் மேம்பாட்டினைக் கருதியல்லவா ஆண்டவன், சிவபிரான், திருமால், ஏசு என்றெல்லாம் வெவ்வேறு திரு நாமங்களால் வழிபட்டாலும் பக்தியால் எழும்முறையீட்டில் மாறுபாடு ஏது? எனவே டாக்டர் போப் திருவாசக வுருக்கத்தில் உளமிழந்து அதனை மொழி பெயர்த்தார் வேற்று மதத்துக்கும் வேற்று மொழிக்கும் உரியது என்று கருதினரவர்.

பொதுவாக, மேனாட்டறிஞர் விமர்சனங்கள் ஆசிரியன் உள்ளத்துணர்வு முதல், நூலின் உயிராகத் திகழும் கருத்துவரை ஒன்றும் விடாமல் எடுத்தியம்புவனவாம். ஆசிரியனுடத்துத் தக்க மதிப்பினை மக்கள் கொள்ள வைப்பன அத்தகைய விமர்சனங்கள் தாம் நாட்டில் நல்ல நூல்கள் பல தோன்றும் வாயில்கள் வகுக்க வல்லவை.

நம் தமிழகத்திலும் அத்தகைய விமர்சனங்கள் பெருக வேண்டும், கவிதைகள் வசன இலக்கியங்கள் இசைப்பாடல்கள் புதுமைக்கதைகள் சிறுகதைகள், நாடகங்கள் ஆகிய நூல்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணுகது நல்ல விமர்சனங்கள் இலலாக் குறையேயாகும்

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்.
53. லிடங்குத் தெரு. சென்னை 1

குருகுல அமைப்பு முறை பற்றிச் சில

(ஆடலரசு)

குருகுலத்தின் கொள்கைகள் தெளிந்த உள்ளமுடன் தீர்ந்த முடிபுடன் மக்கள் வாழ்வியல் துறைகள் பலவற்றையும் உட்கொண்டு ஆசிரியர் அவர்களால் வகுக்கப்பட்டுள்ளன; குருகுலத்தார் அக்கொள்கைகளைத் தீரத்தெளிந்து அவற்றிற்கேற்பக் குறிப்பிட்டுள்ள செய்கைகளில் பழகிவரவேண்டும். பழகி வருகிற நிலையை வைத்தே ஆர்வலர் அன்பர் மாணவர் என்று படிப்படியே உயர்ந்த பிரிவுகள் குருகுலத்தார்க்குள் வைக்கப்பட்டிருக்கின்றன. மேல் மேல் உயரும் நெறிகாட்டுதற்கும் அப்படியே உயர்தற்கும் இப்பிரிவே ஒழிய குருகுலத்தார் அனைவரும் ஒரு குலமாகப் பழகுதற்குரியரே. குருகுலத்தார் அனைவரும் தம் வாழ்வில் பழகுதற்குக் குருகுலத்தின் கொள்கை செய்கைகளில் தெளிவு கொள்வதோடு உலகுக்குப் பயன்படுதற்கு அதன் பணித் திட்டத்தையும் நன்றாக அறிந்து தத்தம் நிலைக்கேற்ற ஏதேனும் ஒரு பணியைக் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும்.

இனி, குருகுலம் திருக்குறட் செயலகமாதலின், பணித்திட்டத்தில் கண்டபடி மாம்பாக்கத்தில் அதிகாரவாரி செயல்கள் நிகழ்வதோடு குருகுலத்தின் ஆட்சி முறையும் திருக்குறள் காட்டும் ஆட்சிமுறைப்படியே இருக்கவேண்டும். உலகத்தில் முடியாட்சிகள் மறைந்து குடியாட்சிகள் அங்கங்கே மலர்ந்து வருகின்றன. ஆனால் அம்மலர்ச்சியின் நிழலிலேயே — ஒரு தலைமைப்பேறின்மையினால் நாட்டுக்கு நாடு போராட்டம் என்பதோடு நாட்டுக்குள்ளே பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல் குறும்பும் அங்கங்கும் மிகுந்து வருகின்றன. இந்நிலையில் உலகப்பொதுமறையாகிய திருக்குறள் எந்த வகையான ஆட்சி முறையைக் குறிக்கின்றது? முடியாட்சியையா, குடியாட்சியையா என்று உலகத்துக்குத் தெளிவு செய்வது எவ்வளவு நல்லது! திருக்குறட் செயலகத்தில் திருக்குறள் ஆட்சி முறை கையாளப்படாமல் வேறு ஆட்சி முறை இருக்கலாமா? திருக்குறள் ஆட்சி முறை இக்காலத்துக்கு ஒத்து வராது என்று சொல்லிவிட முடியுமா? அதுதான் காலங்கடந்த நூலாயிற்றே! ஆகவே திருக்குறட் செயலகத்தில் அதிகாரவாரியாகச் செயல்கள் நிகழ்த்துவது ஒருபுறமிருக்க, அதன் ஆட்சிமுறையையே திருக்குறளின்படி அமைத்து நடத்த ஆசிரியர் அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்கான சூழ்நிலைகளை உண்டாக்கி ஆவன செய்வதற்கு, முன் ஏற்பாடாகவே இப்போது ஒரு செயற்குழுவை அமைத்திருக்கிறார்கள்.

செயற்குழுவை அமைக்கிறபோது ஆசிரியர் அவர்கள் குருகுலத்தைக் கூடிய விரைவில் பதிவுசெய்ய விரும்பியிருப்பது பற்றித் தெரிவித்துத் தாம் எழுதிவைக்க இருக்கின்ற விருப்ப ஆவணப் பட்டயத்தின் (WILL) நகலையும் படிப்பித்தார்கள்

அதுபோது குருகுலம். அதன் அமைப்பாளராகிய தம் தலைமையின் கீழ்—துணைக் குழு செயற்குழு, சிறப்புக் குழு பொதுக் குழு என்னும் நான்கு குழுக்களை உடையதாக இயங்கி வருமென்றும் குறிப்பிட்டார்கள்.

பொதுக்குழு என்பது குருகுல மாணவர், அன்பர், ஆர்வலர் அனைவரும் அடங்கியது; சிறப்புக் குழு என்பது குருகுலத்தில் [மாம்பாக்கத்தில்] திருக்குறள் அதிகாரங்களின் செய்கைப் பொறுப்பை ஏற்கும் குருகுல மாணவர்கள் 133 பேர் அடங்கியது; செயற் குழு என்பது சிறப்புக் குழுவிலிருந்து ஆண்டுக்கு ஒருகால் தேர்ந்தெடுக்கப்படுவது; துணைக் குழு என்பது செயற்குழுவிலிருந்து ஒருவரும் சிறப்புக் குழுவிலிருந்து ஒருவருமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற இருவரும், ஆசிரியர், தாம் தகுதியெனத் தெரிந்து அமர்த்தும் ஒருவரும், ஆசிரியரின் துணைவரும், ஆசிரியர்க்கு வழித்தோன்றலாக அவர்களை அடுத்துக் குருகுலத் தலைவராக விளங்கத்தக்க நிலையில் அவர்களால் அமைக்கப்படுகிற ஒருவரும் ஆக ஐவர் அடங்கியது.

இவ் விளக்கங்களும் ஆசிரியர் அவர்களால் அளிக்கப்படும், புதிதாக அச்சிடப்பட்டுள்ள குருகுலக் கடிதத் தலைப்புகளிலும் சுருக்கமாக வெளிவந்துள்ளன.

குழு அமைப்புகளைக் கொண்டு குருகுலத்தின் நடைமுறை பொதுவாக இன்றுள்ள பல பொது அமைப்புகளைப் போன்றது போலும் என்று எண்ணி விடக்கூடாது; 'குருகுலம்' என்ற பெயருக்கும் திருக்குறள் நெறிக்கும் இந்தப் பொதுவான அமைப்பு முறை பொருந்தி வராது.

குருகுலம் என்றால் ஒரு குருவை அடுத்து நின்று விளக்கம் பெற்று அவர் வழி ஒழுகும் குழுவினர் என்று பொருள். அப்படியானால் குருகுலத்தில், எல்லாம், ஆசிரியர்

திருப்பதால், ஆரியர் கொள்கையை மறுக்க மட்டுமே குறள் இயற்றப்பட்டது என்று கொள்ள இடமில்லை

ஆகவே, ஆரியரேயன்றி உலகவர் அனைவரும் குற்றஞ் செய்வராதலால் பொதுப்படக் குறளை இயற்றினர் என்பதே சாலவும் பொருந்தும்.

இன்று செய்யவேண்டுவ தென்ன?

திருக்குறள் உலகின் எச் சமயத்தார்க்கும், எக்கூட்டத்தார்க்கும், எக்காலத்தார்க்கும் ஏற்றுக் கொள்ளத் தக்க பல அறிவுரைகளை உட்கொண்டிருந்தும், அதனை உலகமக்கள் இதுவரை கருத்தாலும், பேச்சாலும், எழுத்தாலும் போற்றினரேயன்றி நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை ஆகவேதான் இன்றும் உலகம் பல இடங்களில் சிக்கித் துன்புறுகின்றது.

நந் தமிழ் நாட்டில் இன்று தமிழ் ஆர்வம் பெருகி வருவதாகக் கூறப்படுகிறது அதன் பயனைத் தமிழில் அமைந்த ஒப்பற்ற ஒழுக்க

நூலாகிய குறளுக்கும் செல்வாக்கு ஏற்பட்டிருப்பது இயற்கை.

ஆனால் குறள் இன்று, இதுகாறும் இருந்து வந்ததைப்போல் வெறும்பேச்சுக்கும் எழுத்துக்கும் விருந்தாயில்லாமல் வாழ்வின் நடைமுறைக்கு அடிப்படையாகப் பயன்பட வேண்டும். அந்நோக்கத்துடனேயே குறள் ஆராயப்படவேண்டும்

ஆனால், இன்று சிலர் தமக்கென்று சில கொள்கைகளை அமைத்துக்கொண்டு அவற்றிற்குக் குறளில் சான்று தேடுவதில் முனைந்திருக்கின்றனரேயன்றி, குறளாசிரியரின் உயர்ந்த கொள்கைகளுக் கேற்பத் தங்களைத் திருத்திக்கொள்ளப் போவதாகக் காணோம். இத்தகையோர் தங்கள் குறுகிய நோக்கங்களுக்கேற்பக், குறளில் ஒரு சிறு பகுதியைப் போற்றவும் பெரும்பகுதியை இக்காலத்திற் கேற்றதாயில்லை என்று ஒதுக்கவும் முற்படுகின்றனர்.

ஆனால் எல்லாக் குறளும் எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் என்பது, உண்மையை ஆய்வோருக்குப் புலனாகாமற் போகாது.

பெரும் பொருளை 'வாலறிவன்', 'வேண்டுதல் வேண்டாமையில்லாதான்' தனக்குவமை யில்லாதான்', 'அறவாழியந்தணன்' என்றெல்லாம் மொழிவரம்பிற் படுத்தித் தெளிவித்தார். கடவுள் இக் குணங்களின் மொத்தமுமாகி, இவற்றையெல்லாங் கடந்தும் நிற்கின்றது. ஆக, நாம் ஒருவாறு அறிந்துகொள்வதற்காக மொழிக்குள் வரம்பு படுத்தியும் ஆனால் அதன் முழுமை சொற்களில் அடங்காது என்பதைக் குறிக்கவுமே 'கடந்த பொருள்' என்ற கருத்தைக் கொண்ட கடவுள் என்னுஞ் சொல்லைத் தலைப்பில் மட்டும் வைத்தார்.

ஒழுக்க நெறிகளை வரம்புபடுத்திப் பேசும் ஏனைய அதிகாரங்களில் எவ்விடத்தும் கடவுள் என்ற சொல்லைப் பயன்படுத்தாமைக்கும் இதையும் ஒரு காரணமாகக் கொள்ளலாம். எந்த அளவைக்கும் அடங்காது கடந்து நிற்கும் பொருளொன்று உண்டு என்ற உண்மையை நாம் அறிய வேண்டுவது இன்றியமையாததாகலான், தலைப்பிலேனும் அவர் வைத்தது பெரும் போற்றுதலுக்குரியது.

திருக்குறள் வரலாறும் கடவுள் வாழ்த்தும்

உலகியற்கை:

அறிஞர் மிகச் சிலராயும் பாமரரே பெருந்தொகையினராயும் இருப்பதே இவ்வுலகியற்கை. பண்டை நாள் தொட்டும் இன்றும், எதிர் காலத்திலும் இஃதே நிலை. சிலராய அறிஞர் (ஆன்றோரும், சான்றோரும்), பிறராய அறிவால் வறிஞர்க்கு வழிகாட்டிகளாக அமைவதும் இயற்கையே.

பெரும்பாலோரான பாமரருக்கு அவ்வப்போது அறிவுறுத்திக் கொண்டே யிருந்தாலொழிய அவர்கள் ஒழுக்க நெறி நிற்றல் இயலாது. ஆக அவ்வப்போதும் எப்போதும் அறிஞர்கள் தோன்றித் தத்தம் மனம், வாக்கு, காயங்களால் ஒழுக்க நெறிகளை உதவிவந்திருக்கின்றனர்; இன்றும் உதவி வருகின்றனர்.

இவ்வறிஞர் காட்டும் நெறியை ஏனையோர் ஊக்கமாகவும் உண்மையாகவும் பின்பற்றி நடக்கும்வரை துன்பம் இல்லை ஆனால் கால வளவில் ஊக்கமும் உண்மையும் குறைவதும், அதனால் அறிஞர் நம் அவர்தம் ஒழுக்க நன்னெறிகளும் மறக்கப்படுவதும் பெருகி, உலக வர் துன்புறுகின்றனர்.

இவ்வாறு துன்புறுங்கால் மேலும் அறிஞர்கள் தோன்றித் தமக்கு முன்னிருந்தவர்களின் ஒழுக்க நெறிகளை யெல்லாந் திரட்டிச் செப்பனிட்டும், அக்காலத்திற் கேற்ற முறையில் கழிப்பன கழித்தும், புதியன புகுத்தியும் தொண்டாற்றி வந்திருக்கின்றனர் அத்தகையோருள் நந் திருவள்ளுவப் பெருந்தகை தலை சிறந்தவராகத் திகழ்கின்றார்.

குறள் வந்த வரலாறு:

குறள் ஏன் இயற்றப்பட்டதென்று ஆராய்வோம்; சிலர் கூறுவர், '2000 ஆண்டுகட்கு முன்னிருந்தே வட நாட்டிலிருந்த ஆரியர் நம் நாடு போந்து பரவித் தங் கொள்கைகளையும் பரப்பினர், அவர் தங் கொள்கை தமிழர்க்கு

முற்றிலும் மாறுபாடாயும், தீமை விளைப்பதாயும் இருந்ததால், அவற்றை மறுத்தெழுதவே குறள் எழுந்தது என்பதாம் அதற்குச் சான்றாக ஒரு சில குறட்பாக்களையும் எடுத்துக் காட்டுவர்.

ஆனால், இவ்வாறு ஆரியர் கொள்கையை எதிர்ப்பதற்கே குறள் இயற்றப்பட்டது என்னுங் கூற்று முற்றிலும் பொருந்துவ தில்லை. எவ்வாறெனில், ஆரியர் நம் நாட்டுக்கு வராமலே இருப்பார்களானாலும் கால வளவில் எக் கொள்கையும் ஊக்கக் குறைவு உண்மைக் குறைவுகளால் தேய்வுறுவது இயற்கை. தமிழர் தங் கொள்கையிலிருந்து வழுவியிருந்ததே ஆரியர் கொள்கை பரவக் காரணமாயிருந்தது என்றே துணியும் படி நேரும்.

மேலும், ஆரியர் தொடர்பு நேரா முன்னரேயும் தமிழில் தாழ்ந்தோர் கள்ளருந்தல், புலாலுண்ணல், பொதுமகளிரைச் சேர்தல் முதலாய இழி செயல்கள் புரிந்து வந்தனர். இத் தீச் செய்கைகளையும் வள்ளுவனார் கண்டித்

விளக்கவுரை வேண்டுமா?

குறள் ஓதற் கெளிது, உணர்தற்கரிது. நாம் கேட்டுக் கேட்டுப் பழகிய ஒரு சில குறட்பாக்களுக்குத் தவிர மற்றைய பாக்களுக்கு உரை இன்றியமையாததாம். இதுவரை பல உரைகள் வெளிவந்திருக்கின்றனவென்றாலும் இக்காலத்திற் கேற்ப மேலும் எளிமையான பொருத்தமான உரை காணவேண்டுமென்ற முயற்சி நடக்கிறது. முயற்சி நல்லதே என்றாலும் முன் சொன்னபடி, தங் கருத்துக் கேற்ப உரை யெழுதாமல் ஆசிரியர் கருத்துப்படி உரை காண்பார்களாக.

முதலதிகாரம்:

குறளின் முதல் அதிகாரம் 'கடவுள், வாழ்த்து" என்றமைந்திருக்கின்றது. கடவுளுண்டு என்ற நம்பிக்கையும் மதிப்பும் உள்ளவர்களுக்கு இவ்வதிகாரத்தைப் பற்றிப் பலத்த கருத்து வேறுபாடு இல்லையானாலும் கடவுளில்லை என்னுங் கருத்தோர், இக் கடவுள் வாழ்த்து அதிகாரமும் மேலுஞ் சில அதிகாரங்களும் வள்ளுவரால் எழுதப்படவில்லை, இடை

யில் யாராலோ செருகப்பட்டுவிட்டன என்று ஒரு நேரத்தில் கூறுவதும், அக் கூற்றைச் சான்றுகளோடு நிறுவவியலாத நிலையில் பின்னொரு நேரத்தில் கடவுள் வாழ்த்து அதிகாரம் உயர் குணங்களையும் ஒழுக்கங்களையும் வாழ்த்தியதே என்றுங் கூறுவர். இவர்தம் கூற்றுக்கள் ஆராயற்பாலன.

கடவுள் என்ற சொல் குறளில் எவ்விடத்தும், ஏன் இம் முதலதிகாரத்திலுங் கூடக் காணப்படவில்லை என்பது இவர்கள் காட்டும் சான்று. இஃது உண்மையேயானாலும், ஆராய்ந்தால் காரணம் வெளிப்படும்.

கடவுள் என்ற 'ஒன்று' மனம் வாக்கு அறிவு முதலியவற்றாலும், பிற எந்தக் கருவிகளாலும் அளந்து காட்டவும், மொழியின் வரம்புக்குள் அமைந்துவிளக்கிக்காட்டிமுடிவுகாணவும் ஏலாத ஒன்று; உணர்வதற்கே உரியது. ஆனால் கடவுளியல்புகளிற் சிறிதேனும் நாமறிந்தாலன்றிப் பயனில்லையாதலால், கடவுள் என்ற

மதுராந்தகம் வட்டக் கல்விக் கண்காணிப்பாளர்

உயர்திரு. வி. சுப்பிரமணியம் அவர்கள்

திருநெல்வேலி மாவட்டத்துக்குத் தம் அலுவல்
மாறுதலாகிச் செல்வதை முன்னிட்டு
மாம்பாக்கம் குருகுலம் உயர் தொடக்கப் பாடசாலையார்
10–5–57 ல் அன்புடன் அளித்த

வழியனுப்பு வாழ்த்து மடல்

மங்கலப் பாண்டி வளநா டதனில்
பொங்குமுத் தமிழின் புதுவளங் கொழிக்குஞ்
சீவை குண்டச் செழுநில மேவுங்
கருங்குளச் சிறூர்ப் பெருங்குடி வாழ்ந்த
செந்தண் உளத்தின் அந்தணர் பெருமான்
விசுவநா தய்யர் இசைமனைச் செல்வி
மாட்சிசா லம்மை நல்விசா லாட்சி
ஆகிய பெற்றோர்க் கோகை செழிக்க
நற்றவத் துதித்த பொற்புடைச் செல்வ!

இளமையிற் கல்வி வளமுளத் தினிக்கப்
பாளையங் கோட்டைப் பள்ளியிற் பயின்றே
காளைமைப் பருவம் கல்வியிற் களித்தும்,
கற்ற கல்வியிற் கருத்தினை யுலகிற்
பொறுப்புடன் பரப்பல் புகழ்கொள் தொண்டென
எண்ணியங் கதற்கா நண்ணிய பயிற்சி
பெற்றபின் நெல்லைப் பிறங்குமா சிரியர்
கற்றிடு போதனைக் கலைமலி பள்ளியில்
ஆசா னாகத் தேசுடன் திகழ்ந்தும்,
போதனா முறையின் சாதனை செழித்தும்
செங்கை திண்டுக் கல்லொடு திருவூர்,
அங்கெலா மாசான் அலுவலிற் களித்தும்
திருவருள் துணையாற் பெருவிழாக் காஞ்சியில்
கல்விக் காப்புக் கடமையின் துணையாம்
நல்லதோர் அலுவலின் நனியுளஞ் செழித்தும்,

செல்லா நல்லிசை திசைதிசை பரவப்
புதுநீர் வளங்கொள் மதுராந் தகத்திற்
பள்ளிச் செழுமை தெள்ளிதின் ஓங்கக்

கண்கா ணிக்குங் கடமையில் உயர்ந்தும்,
புண்ணியம் பெருக்கும் தண்ணுளப் பெரும!

சுப்பிர மணிய! செப்புநற் புகழோய்!
கனியுநல் லுளத்தில் இனியவே எண்ணி
நாட்டின் கல்வியில் நாட்டமே பெரிதாய்

இன்புறும் அண்ணல்! எமது குருகுலம்
தண்டமிழ்ப் பண்பும் தனித்திருக் குறளும்
யாண்டும் ஓங்க இறையருள் துணையின்
நாளும் உழைக்கும் நலமார் நிலைய
மாதலின் இதனில் அன்புளங் கொண்டோய்!
உயர்ந்த தொடக்கப் பள்ளியும் ஆக்கினை;
வளர்ந்த நிலையில் மாணவர் இல்லமும்
நிலையுறக் கண்டனை; நின்நன்றி மறவேம்;
என்றும் மறவேம்; இறையருள் வலத்தால்

துன்பகல் வாழ்வில் துகளிலா ஒழுக்கில்
மேன்மைசால் மரபில் தான்மகிழ்ந் தென்றும்
மேற்குப் பிறைபோல் பாற்படச் செழித்தே
பதவியி லுயர்க! கதியெனத் தொண்டே
கருதுக! களித்துளம் வாழ்க!
திருவருள் வலத்தால் செறிகபல் லாண்டே!

மாம்பாக்கம்,
10–5–57.

இங்ஙனம்,
குருகுலம் உயர் தொடக்கப் பாடசாலையார்.

ஒருவர் கருத்தின்படியேதான் நடக்குமா? என்றும் கேட்கத் தோன்றும். அப்படியன்று. அவர் கருத்துக்கள் மேன் மேலும் நன்கு பரவிநிகழ்வதற்குக் குழுவினரும் ஆக்கமுகமான கருத்துரைகள் சொல்லிக் கொள்ள இடமுண்டு. ஆனால் எல்லாம் ஆசிரியர் அவர்களின் இசைவு பெற்ற பின்னரே நடக்கவேண்டும்.

திருக்குறள் ஆட்சி முறையைக் குடிக்கோன் ஆட்சி எனலாம்; குருகுலத்தின் ஆட்சி முறையும் இத்தகையதே.

ஆசிரியர் தம் விருப்பப்படி, எல்லாம் செய்யும் உரிமையுடையவரே ஆயினும், முக்கிய செய்கைகளில் குருகுலத்தாரையுங் கலந்துகொள்ளவிரும்பக் கூடும்.

கோட்பாட்டுக்கு மாறுவன நிகழவொட்டாதபடி தடுக்கும் உரிமை பொதுவாக அனைவருக்கும் உண்டாயினும், ஆசிரியருக்கு அது தனி உரிமை. ஓரே நெறியில் ஒழுகி முன்னேறுதற்கு இத்தகைய தலைமைப் பேறு இன்றியமையாதது.

குருகுலத்தார் செலுத்தும் காணிக்கை அனைத்தும் ஆசிரியருடைய தனிஉடைமையே ஆகும். ஆனாலும் அவர்கள் தம் தகுதிக்கேற்பத், தம் வருவாயில் 6-ல் 1-கூறு மட்டும் தம் உரிமைக்கு ஒதுக்கிக்கொண்டு மற்ற 5-கூறும் குருகுலத்திற்கே உரிமையாக்கிவிடுகிறார்கள். குருகுலம் என்ற அமைப்பு தம் காலத்துக்குப் பின்னரும் நடைபெறுவதற்காக அவர்கள் அளிக்கும் ஆக்கங்களுடன் இதுவும் சேர்கின்றது.

ஏனை இடங்களில் சொத்துகள் முடங்கிக்கிடப்பது போல குருகுலத்தில் கிடப்பதற்கு இடமில்லை. குருகுலச் சொத்துக்களை ஆசிரியரோ அதிகாரச் செய்கையாளரோ ஏனைக் குழுவினரோ யாரும் விற்கவோ வைக்கவோ மாற்றவோ அவற்றின்மேல் கடன் கொள்ளவோ உரிமை இல்லை. ஆட்சி உரிமை மட்டுமே ஆசிரியருக்கும் குருகுலத்தார்க்கும் உரித்தாயிருக்கும். தலைவருக்குள்ள சிறப்புரிமை, எதிலும் ஒரு முடிவு கண்டு செயலாற்றுவதே ஆகும்; ஆசிரியர் முடிவே முடிந்த முடிபு; பின்னர், அனைவரும் அதன் வழியே ஒத்து இயங்கி உதவுதற்குரியர்.

அதிகாரச் செயலுரிமையும் அதன் ஆட்சியும் குருகுலத்தார்க்கு வழிவழியாக அமையும். ஆயினும் அதன் சார்பில் செயல நிகழாதபோது, அதனைச் செயல் நிகழ்த்தத் தக்கபடி வேறு ஒருவருக்கு மாற்றும் உரிமையும் ஆட்சிக் குழுவுக்கு இருக்கிறது.

இப்படிக் கூட்டுப் பொறுப்புள்ளதாகக் குருகுலம் இருத்தலினாலும் ஒரு தலைமைப் பேற்றின் கீழ் இயங்குவதனாலும். அதன் ஆட்சி முறை திருக்குறள் காட்டும் பண்டைக்காலத் தண்டமிழ் நாட்டின் குடிக்கோனாட்சியாய்த் திகழ்ந்து நலம் பல பயக்கும்.

இனி. குருகுலத்தின் உடைமைகள் தனியுடைமையிற் பொதுவுடைமையும், பொதுவுடைமையில் தனியுடைமையும் ஒன்றுக்கொன்று பிணைந்து ஒரு புது வகைப் பொருளாட்சி முறையை உலகுக்கு உணர்த்துகிற முறையில் ஆசிரியரால் அமைக்கப்படுகின்றது. உலகமே இன்று தனியுடைமை பொதுவுடைமை என்னும் இருபெரும் பிரிவில் நின்று போராடி வருவதை நாம் அறிவோம். தனியுடைமையின் நலந்தீங்குகளை உலகம் உணர்ந்திருக்கின்றது. பொதுவுடைமையின் நலந்தீங்குகளை இனித்தான் உணர வேண்டும். பொதுவுடைமை முறையிலும் சங்கடங்கள் இருக்கின்றன என்பது இப்போதே பொதுவுடைமை நாடுகளுக்குள் ஏற்பட்டு வருகிற பிணக்குகளால் ஓரளவு தெரிகின்றது. இந் நிலையில் இவ்விரண்டுங் கலந்த ஒரு புதுமையை – பழமையோடு கூடிய புதுமையை உலகுக்கு உணர்த்துவது நல்லதேயன்றோ!

இவைபற்றியெல்லாம் ஆசிரியர் அவர்கள் நாளடைவில் இன்னும் நன்றாகத்தாமே உறுதிப்படுத்துவதோடு குருகுல நடைமுறை விதிகளைச் சட்டவல்லுநர் துணைக்கொண்டு விளக்கமாகவும் நுணுக்கமாகவும் வரையறுத்துப் பதிவு செய்தும் வைப்பார்கள்.

இவ்வமைப்பு முறைகளைக் குருகுலத்தார் தெளிவாகத் தெரிந்துகொண்டு, அவற்றின்படி இணங்கிக் குருகுலத்தை வளர்த்துத் தமக்கும் உலகுக்கும் பயன் காண வேண்டுவது குருகுலத்தார் அனைவருக்கும் கடமையாகும்.

* * * *

மணித் திரள்

எங்கள் வீட்டிற்கு வரும் நண்பர்களோ உறவினர்களோ கெட்ட நடவடிக்கையுடையவர்களாக இருந்தால், அல்லது அவர்கள் வருவதை நான் விரும்பவில்லையென்றால், அவர்கள் போகும்போது ஒரு ஜதை மிதியடிகளையோ அல்லது ஒருபார்வைக் கண்ணாடியையோ அல்லது குறைந்த மதிப்புள்ள ஒரு குதிரையையோ கடன் கொடுக்கத் தவறுவதில்லை. திருப்பித்தர விருப்பமின்றி அவர்கள் திரும்பிவருவதே கிடையாது.

— ஆலிவர் கோல்டுஸ்மித்

மொழிப் பகுதி — அறிவு வலிமைக்கு [முன்தொடர்ச்சி]

துன்பம் ஏன்?

(மணி)

அவர்கள் சீரிய அறிவு பெற வழிகோலினும் இன்றுள்ள நாகரிகம் அதைக் கெடுத்து அதனை மாற்றியமைத்து விடுகிறதே. ஆகவே மக்கள் எப்படி மாட்சிமைப் பட்டவர்களாக வாழ இயலும்.

ஏவலரோ குறிப்பறிந்து ஒழுகுபவர், இன்றுள்ள ஏவலாளர்கள் குறிப்பறிந்து நடக்கும் திறமைபெற்றாரில்லை. அது மட்டுமா? தலைவனை ஏமாற்றிப்பொருள் தட்டிப் போகும் ஏவலாளரும் இருக்கின்றனரே. அப்படி இருக்கும் நிலையுள்ள குடும்பங்களில் தலைவன் எப்படி அமைதியுடன் இருப்பான்?

ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர் வாழும் ஊர் என்றார், சான்றோர்களே இன்று இருக்கும் இடம் தெரியாமல் இருக்கின்றனர். தப்பித்தவறி வெளிவந்து அறிவுரை கூறிடினும் அதற்கு முரண்பட்ட கேள்விகளும் மற்றும் பலவுப்எழுப்புகின்றதே நாடுநாட்டில் இது ஒரு புறமிருக்க சான்றோர்கள் கூறுவதைத்தான் கேட்க மக்களுக்கு நேரமேது? வேலை செய்வதிலும், வீட்டிற்கு வேண்டியன தேடுதலுக்குமே அவர்கள் இயந்திரம் போல் உழைக்கின்றார்கள் எனில் சான்றோர்கள் கூறுவனவற்றில் அவர்கள் அறியக் கூடியது நூற்றுக்கு படித்தவர்களிடையே இருபத்தைந்தாவது இருக்குமா என்பதே சந்தேகத்தில் உள்ளதே. அப்படியே அவர்கள் கேட்டாலும் அதைச் சிந்திக்க ஒழிவேது? இப்படியெல்லாம் நாடு இருக்குமானல் அந்நாட்டு மக்கள் ஆண்புறுவதன்றி. வறுமையில் வாடுவதன்றி வேறுவழியாதுளது?

சான்றோனுக்குதல் தந்தையின் கடன் அல்லவா; அதனையார் செய்கின்றனர்? யாரால் செய்யத்தான் முடிகின்றது? தந்தையும் மகனும் ஒருநாளில் இன்று எத்தனை பேர் நெருங்கி வாழுகின்றனர்?

எனவே மக்கள் தங்களைச் சிந்திக்கவும் நாட்டைச் சிந்திக்கவும், வழி வகுப்பது மிகவும் அவசியமாகும்.

இன்று, நேற்றல்ல. பழங்கால முதற் கொண்டே பொருள் ஒவ்வொருவருக்கும் தேவையாக இருந்தது; இன்றும் இருந்துவருகின்றது. அப்படிப்பட்ட பொருளை இன்று பலர் பற்பல வழிகளின் வாயிலாக இயற்றவும் செய்கின்றனர். அவ்வாறு இயற்றி அதன்வழிவந்த பொருளைத் தொகுத்து, பிறர் கொள்ளாமற்காக்க வேண்டும். அவ்வாறு பொருளைக் காப்பதற்கு 'பாங்கி' முதலியன இருந்தும் அவைகளை ஒரு சிலர் பயன்படுத்துகின்றனரே ஒழியப் பலர் பயன்படுத்துவதில்லை. சரிவரக் காக்கவும் தெரியாமல் அவைகளை வீணே இழந்துவிடுகின்றனர். மேலும் அவர்கள் ஈட்டிய பொருளை சரிவர இன்னின்னவற்றிற்கு இப்படி செலவு செய்ய வேண்டும் என வழிவகுப்பதில்லை. வீணே பொருளைப் பிறர் கொண்டு போவது ஒரு புறமிருக்க அவைகளைச் செலவு செய்வதிலும் தவறான வழியில் செலவுசெய்கின்றனர். எனவே அவர்கள் பெறும் பொருளும் போதிய அளவு அன்றி பற்றாக்குறை ஏற்பட்டும் வருந்துகின்றனர்.

சிலருக்கு வரும் பொருளும் அவர்களுக்குத்தேவையானவற்றைப் பெறுவதற்குக்கூட வழியின்றி வாடுகின்றனர். எனவே அங்கேயும் வறுமை தாண்டவமாடுகிறது,

வறுமையினால் பிணி ஏற்படுகின்றது. எனவே வறுமையை ஓட்டுதல் அவசியமாகும். வறுமையுள்ள நாடு நாடாகாது.

ஆகையினால் பெற்றோர்கள் தங்கள் மக்களைச் சான்றோனாக்கியும்; பெரியோர்கள் அம் மக்களைச் சிறந்த முறையிலே, நாட்டிற்குப் பயன்படுவகை வழி வகுத்தலும்; வகுத்த வழியை 'மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்' ஆதலால்; அதனைத் திறம்பட நடத்த அரசும் முயற்சி செய்தல் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

* * *

சமயப் பகுதி – அருள் வலிமைக்கு

முன் செய் புண்ணியம்

உலகத்தில் நல்வாழ்வு வாழும் ஒருவரைப்பார்த்தவுடன் இவர் முற்பிறவியில் சிறந்த புண்ணியம் புரிந்தவர் என்று நினைக்கிறோம். பலரும் பாராட்டும் இனிய வாழ்வினை அவர்க்குத்தந்த அப்புண்ணியத் திருவினை உளமார வாழ்த்துகின்றோம். நாமும் அந்நிலையில் சிறந்து வாழ விரும்புகின்றோம். அதற்கான நற்செயல்களிலும் ஈடுபடுகின்றோம்.

முன்னைய பிறப்பில் ஒவ்வொருவரும் புரிந்த நல்வினை தீவினைகளை இன்றைய வாழ்வு உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விளங்கக் காட்டுகின்றது. முன் புண்ணியம் புரிந்த ஒருவனுக்கு இயல்பாகவே இப்பிறவியில் வாழ்க்கைச் சூழ்நிலை இனிமையாக அமைகிறது. அவன் வாழ்வில் அவ்வளவாக இடையூறும் குறுக்கிடுவதில்லை. இடர்கள் வருவதுபோல் தோன்றினும் அவை அவனை நெருங்குவதில்லை. விலகிச் சென்று மறைதலே இயல்பு. அது மட்டுமில்லை. இப்பிறவியிலும் அவன் உள்ளம் நல்ல செயல்களையே விரும்பி நிற்கும். பிறருக்குத் தீங்கு பயவாத செயல்களையே நாளும் செய்து மகிழ்வான்.

முன் பிறவியில் புண்ணியமல்லாத செயல்களைச் செய்தவனையும் இவன் இத்தகையவன் என்று அவனுடைய இன்றைய வாழ்வு உலகுக்குக் காட்டிவிடுகிறது. அவன் இப்பிறவியில் கற்றுணர்ந்த நூலறிவுகொண்டு என்னதான் விழிப்பாக நடந்து சென்றாலும் முன்னைய தீவினை அவனை என்றைக்கிருந்தாலும் ஒரு நாள் வெளிப்படுத்தியே தீருகிறது.

புண்ணியச் செயல்கள் இருவகைய; ஒன்று வையத்துள் வாழ் வாங்கு வாழ்வதற்குரிய நற்செயல்களில் ஈடுபடுதல். மற்றையது உலக இன்பங்களை வெறுத்தொதுக்கி இடையறா இன்பம் பெருக்கும் வீடுபேற்றை அடைதற்குரிய நற்செயல்களை விரும்பிச் செய்தல்.

உலகத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான நல்ல செயல்களைச் செய்து வருவது நல்லது தான். ஆனால் என்றைக்கிருந்தாலும் அழியக்கூடிய உலக இன்பவாழ்வுகளை அடைய விரும்புதலை விட அவற்றினும் மேலானதும் நிலையானதுமான வீடுபேற்றை எண்ணிச் செய்யும் சிவபுண்ணியச் செயல்கள் எத்தனையோ மடங்கு சிறந்ததல்லவா!

இத்தகைய சிவ புண்ணியம் முன் பிறவியில் செய்தவரை எப்படி அறிவது? இதனை அறிய மிக எளிய வழி இருக்கிறது. இப்பிறப்பில் மிக எளியவான அழிதன் மாலையவான உலக இன்பங்களில் வெறுப்பு மிகுந்து இறைவன் திருவருள் இன்பத்தை எண்ணி எண்ணி உருகி மன மொழி மெய்களின் சிறந்த துணை கொண்டு அத்தகைய இன்பத்தை அடைய இடையறாது முயலும் அன்பர்களே முற்பிறவியில் சிவ புண்ணியம் செய்தவர் என்று உறுதியாக அறியலாம்.

முன் செய் புண்ணியத்தின் ஆட்சியே அவர்களை இப்பிறவியில் இறையருளின்பத்தில் ஈடுபடச் செய்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

திருக்கடவூர் அபிராமிபட்டர் அத்தகைய சிவ புண்ணியச் செல்வர் என்பது அவர் தம் அருமைத் திருவாக்கிலிருந்து தெரிகிறது.

திருக்கடவூரில் கோயில் கொண்ட அபிராம வல்லியைத் தரிசிக்க வேண்டும் என்று தம் உள்ளத்தில் எழுந்த எண்ணமே தம்முடைய முற்பிறவியின் புண்ணியச் செயலாக இருந்ததல்வேண்டும் என்று கருதும் இவ்வடியார் மாட்சியை என்னென்பது!

வாணுதற் கண்ணியை விண்ணவர்
யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு

(8-ம் பக்கம் பார்க்க)

குருகுலச் செய்தி:

ஆசிரியர் விரிவுரைகள்
(நடக்க இருப்பன)

சென்னை:

19-5-57 ஞாயிற்றுக்கிழமை சென்னை மல்லீசுரர் கோயிலில் பெரிய புராணம்.

கல்கத்தா:

24-5-57 முதல் ஒருவார காலம், 'தமிழ் மாணவர் மன்றம்' முதலிய அமைப்புகளின் சார்பில் தமிழ் இலக்கிய விரிவுரைகள்.

ஆசிரியர், 20-5-57 மாலை 7-15 மணிக்கு 'ஹௌரா எக்ஸ்பிர' ஸில் அன்பர் சிலருடன் கல்கத்தா புறப்படுகின்றனர்.

நெல் உதவி

கயப்பாக்கம் திரு முத்துக் கொண்டா ரெட்டியார் அவர்கள் வாயிலாக, காட்டரண்பாக்கம், திரு. வரதா ரெட்டியார் அவர்கள் நெல் உதவி 25 கலம் சேர்ந்திருக்கிறது. நன்றி.

குருகுலப் பாடசாலை

கோடை விடுமுறைக்காக இப்பாடசாலை 10-5-57-மாலை விடப்பெற்று 7-6-57 காலை திறக்கப்பெறும். அன்று 7-வது வகுப்பும் தொடங்கப் பெறும்.

பாடசாலையின் எல்லா வகுப்புக்களிலும் புதிய பிள்ளைகள் அப்போது சேர்த்துக் கொள்ளப்பெறுவர். ஜூன் மாத முழுதும் பிள்ளைகள் சேரலாம்.

வழியனுப்பு விழா

பாடசாலை கோடை விடுமுறைக்காக விடப்பெற்ற 10-5-57-ல் மதுராந்தகம் வட்டம் பள்ளிகள் கண்காணிப்பாளர் திரு வி. சுப்பிரமண்யம் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்துக்கு மாறுதலாகிச் செல்வதை முன்னிட்டுக் குருகுலத்தில் வழியனுப்பு விழா காலை 6-மணிக்கு நடைபெற்றது. உதவிக் கண்காணிப்பாளர் முதலியோரும் விழாவிற்கு வந்திருந்தனர். பக்கத்து ஊர்ப் பாடசாலை ஆசிரியரும் வந்திருந்தனர்.

தேநீர்க்குப்பின் நிழற்படம் எடுக்கப்பெற்றது; குருகுல இல்லத்தில் உறையும் சிறுர் பலரும் ஒருங்கு குழுமி ஒரு தனி நிழற்படம் எடுத்துக்கொண்டனர்.

விழாவுக்கு ஆசிரியர் இளவழகனார் தலைமை ஏற்று, முன்னுரை வழங்கியபின், மாறுதலாகிச்செல்லும் கண்காணிப்பாளரவர்களுக்கு ஒரு வழியனுப்பு வாழ்த்து மடல், கவிஞர் சி. து க. எழுதியது, தலைமையாசிரியரவர்களால் படித்துக் கொடுக்கப் பட்டது.

பாடசாலை ஆசிரியரும் பிறரும், பாராட்டும் வாழ்த்தும், நன்றியும் தெரிவித்துக், கண்காணிப்பாளரவர்கள் தகுதி திறமை, பண்பு, சேவை, அன்பு, முதலியவெல்லாம் போற்றினர்.

உதவிக் கண்காணிப்பாளரவர்கள் இறுதியிற் பேசினர். மாறுதலாகிச் செல்லும் ஆய்வாளர் அன்பும் சகோதர பாசமும் மகிழ்ச்சி முகமும் உடையவர் என்று ஆராமையாய்க் கூறினர்.

குருகுலத்தைப் பற்றி அவர்கள் கூறும்போது, 'இது விரைவில் கல்லூரியாக உயரும் என்பதுஎன் கருத்து. உயரும் என்று திண்ணமாய் நம்புகிறேன் குருகுலத் தலைவர் முயற்சி அத்தகையது இனி வருங் கண்காணிப்பாளர் முதலியோரும் இக் குருகுலத்தில் தனி மதிப்பும் அன்பும் ஆக்கமும் கொள்வர்' என்று நல்லுரை பகர்ந்தனர்.

மாறுதலாகிச் செல்லும் பள்ளி ஆய்வாளர், கடைசியாகச் சில அன்புரைகள் மொழிந்தனர். 'தலைவரவர்கள், குருகுலத் தந்தை! அவர்கள் நேர்ப் பார்வையிற் குருகுலம் நடக்கின்றது, இது, நல்ல முறையில் அமைந்திருக்கின்றது. நீங்கள் புண்ணியம் வாய்ந்தவர்கள்; நீங்கள் பெருமை கொள்ள ஏது உண்டு; மாம்பாக்கம் குருகுலத்தில், பேராசிரியர் பார்வையில், பழகி வெளிவந்தோம் என்னும் நிறைவு உங்களுக்கு உண்டு.

குருகுலத் தந்தை எண்ணியதைச் செயலில் நிறைவேற்றும் ஆற்றல் வாய்ந்தவர், முடிக்கும் திறமையும் உடையவர்.

அடுத்த ஆண்டில் 8-ம் வகுப்பும் வரும், தென்னாடு முழுதும் இதில் ஈடுபடும்; இதைப்பற்றித் தொண்டு செய்ய நானுங் கடமைபட்டவன்

என்றும் இப் பாடசாலையை மறவேன், நெஞ்சார நினைந்து மகிழ்வேன்' என்று கனிவு ததும்ப உரைத்தார்கள்.

ஆய்வாளரவர்களின் உண்மைக் கனிவு உரைகள். அவையோர் உள்ளத்தை உருகி விட்டன.

இல்லத்தின் காப்பாளர் நன்றியுரைகூறினர். நாட்டுவாழ்த்துப் பாடலுடன் விழா இனிது நிறைவெய்தியது.

* * * *

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டியைப் பேதை நெஞ்சிற்
காணுதற் கண்ணிய ளல்லாத
கண்ணியம் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய எண்ண
மன்றே முன்செய் புண்ணியமே.

(அபிராமி யந்தாதி)

* * * *

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்,
குருகுல அச்சகம், மதுராந்தகம் (அஞ்சல்); செங்கற்பட்டு மாவட்டம்: தமிழ்நாடு